**செ. கு. எண்**:217 **நாள்**: 12-06-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 12.6.2012

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், முத்தரசநல்லூர் கிராமம், அருள்மிகு தாளாடியம்மன் திருக்கோயில் அருகில், 5.6.2012 அன்று காரைக்குடியிலிருந்து திருப்பூர் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில், அப்பேருந்தின் ஓட்டுநர் திரு. பாரி என்கிற சுந்தரம் மற்றும் பேருந்தில் பயணம் செய்த திருமதி சந்திரலேகா ஆகிய இருவரும் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

இலால்குடி வட்டம், கல்லக்குடி கிராம பிரதானசாலையில் 7.6.2012 அன்று இரு சக்கர வாகனம் ஒன்றின் மீது திருச்சிராப்பள்ளியிலிருந்து சிதம்பரம் சென்று கொண்டிருந்த அரசுப் பேருந்து மோதியதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த கல்லக்குடி சமத்துவபுரத்தைச் சேர்ந்த திரு. கிளிக்குஞ்சு என்பவரது மகன் திரு. நல்லதம்பி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இச்சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த பாரி என்கிற சுந்தரம், சந்திரலேகா மற்றும் நல்லதம்பி ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முத்தரசநல்லூர் கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில் 18 நபர்களும், கல்லக்குடி கிராமத்தில் ஏற்பட்ட சாலை விபத்தில், இரு சக்கர வாகனத்தில் பயணித்த திரு. ராஜேந்திரன் ஆகியோர் காயம் அடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்களுக்கு

நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், திருச்சிராப்பள்ளி மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் சாலை விபத்துகளில் உயிரிழந்த பேருந்து ஓட்டுநர் திரு. பாரி என்கிற சுந்தரம் குடும்பத்திற்கு இரண்டு லட்சம் ரூபாயும், திருமதி சந்திரலேகா மற்றும் திரு. நல்லதம்பி குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**